


# ஸத் ஸம்ப்ரதாயம்

## आखुवाहनमार्तिहारकं ईप्सितार्थफलप्रदम् ।
## श्रीविनायकमाश्रये गजराजतुण्डमुमासुतम् ॥

**ஆகு$^{2}$வாஹனமார்திஹாரகம்’ ஈப்ஸிதார்த$^{2}$ப$^{2}$லப்ரத$^{3}$ம் |**
**ஶ்ரீவிநாயகமாஶ்ரயே க$^{3}$ஜராஜதுண்ட$^{3}$முமாஸுதம் ||**

பெரும் எலியை வாகனமாக்கிக் கொண்டவர், துயர்நீக்குபவர், நாடிய



பொருளைத் தருபவர், யானை முகமுள்ளவர், உமையின் மைந்தன், அந்த ஸ்ரீ விநாயகரைப் புகலடைகிறேன் **(ஹரநர்தக ஸ்துதி)**

.

## அருள் மொழிகள்

**இறைவனை நாடுபவன், மனதைக் கட்டுப்படுத்தி எல்லாச் செயல்களையும் இறைவனுக்காகவே செய்யவேண்டும். செயல்களின் பலன் மீதான ஆசையைத் துறக்க வேண்டும். பொதுவாக எல்லோரும் பலனை எதிர்பார்த்தே எந்தவொரு செயலையும் செய்கின்றனர். ஆனால் அப்படிச் செய்வது பந்தத்திற்கு வழி வகுக்கும்.**

—ஜகத்குரு சங்கராசார்யர் அபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள்

June 2022



## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

**शक्यो वारयितुं जलेन हुतभुक् शूर्पेण सूर्य आतपो**
**नागेन्द्रो निशित अंकुशेन समदो दण्डेन गौ: गर्दभ: ।**
**व्याधि: भेषज संग्रहै:च, विविधै: मन्त्रै:**
**प्रयोगै: विशं सर्वस्य औषधं अस्ति शास्त्र विहितं**
**मूर्खस्य न अस्ति औषधं ॥**

**ஶக்யோ வாரயிதும்’ ஜலேன ஹுதபு⁴க் ஶூர்பேண ஸூர்ய ஆதபோ**
**நாகே³ந்த்³ரோ நிஶித அங்குஶேன ஸமதோ³ த³ண்டே³ன கௌ³: க³ர்த³ப⁴: |**
**வ்யாதி⁴: பே⁴ஷஜ ஸங்க்³ரஹை:ச, விவிதை⁴: மந்த்ரை:**
**ப்ரயோகை³: விஶம்’ ஸர்வஸ்ய ஔஷத⁴ம்’ அஸ்தி ஶாஸ்த்ர விஹிதம்’**
**மூர்க²ஸ்ய ந அஸ்தி ஔஷத⁴ம்’ ||**

நெருப்பும் ஜலத்தினால் அணைக்கக்கூடும், ஸூர்ய வெப்பத்தினால் ஏற்படும் தாபம், விசிறியினால் தணிக்கக் கூடும். மதம் பிடித்த யானையையும் கூறிய அங்குசத்தால் அடக்க முடியும். சரீரத்தைப் பற்றிய வியாதியை ஔஷதங்களைக் கொண்டு போக்கலாம். பல மந்த்ரங்களை ப்ரயோகித்து விஷத்தை சரீரத்திலிருந்து போக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு உபாதைக்கும் சாஸ்த்ர உசிதமான ஔ ஷதங்கள் உள்ளன. ஆனாலோ, மூர்கத்தனத்திற்கு மட்டும் மருந்து மாற்று என்பதே கிடையாது.

(மூர்க்க பத்ததி: (மூர்க்கர்கள் இயல்பு)

## விதுர நீதி

**विदुर: उवाच**
**राजा लक्षणसंपन्न: त्रैलोक्यस्याधिपो भवेत् ।**
**प्रेष्यस्ते प्रोषितश्चैव धृतराष्ट्र युधिष्ठिर: ॥**
**विपरीततरश्च त्वं भागधेये न सम्मत: ।**
**अर्चिषां प्रक्षयाच्चैव धर्मात्मा शर्मकोविद: ॥**
**आनृशंस्यात् अनुक्रोशात् धर्मात् सत्यात् पराक्रमात् ।**
**गुरुत्वात् त्वयि सप्रेक्ष्य बहून् क्लेशान् तितिक्षते ॥**

**விது³ர: உவாச**
**ராஜா லக்ஷணஸம்பன்ன: த்ரைலோக்யஸ்யாதி⁴போ ப⁴வேத் |**
**ப்ரேஷ்யஸ்தே ப்ரோஷிதஶ்சைவ த்⁴ரு’தராஷ்ட்ர யுதி⁴ஷ்டி²ர: ||**
**விபரீததரஶ்ச த்வம்’ பா⁴க³தே⁴யே ந ஸம்மத: |**
**அர்சிஷாம்’ ப்ரக்ஷயாச்சைவ த⁴ர்மாத்மா ஶர்மகோவித³: ||**
**ஆந்ரு’ஶம்’ஸ்யாத் அனுக்ரோஶாத் த⁴ர்மாத் ஸத்யாத் பராக்ரமாத் |**
**கு³ருத்வாத் த்வயி ஸப்ரேக்ஷ்ய ப³ஹூன் க்லேஶான் திதிக்ஷதே ||**



திருதராஷ்டிரரே ! ஓர் அரசன் அரசருக்குரிய சிறப்புகளுடனிருந்தால் மூவுலகையும் ஆள்வான். அத்தகைய யுதிஷ்டிரன் நீர் உத்திரவிட்டதைப் பணிவுடன் முடிக்கிறவனாக இருந்தான். அவன் நாடு கடத்தப்பட்டான். கண்ணொளி இழந்தமையால் தர்மத்தை அறிந்தவராயும் தர்மத்தில் நாட்டம் உடையவராயும் மிருந்தும் நீர் விபரீதமாகத் செயல்பட்டு நம்மையை மதிக்கவில்லை.

பிறர் பொல்லாதவன் எனக் கூறாத வண்ணம் நடப்பது, பரிவு, கடமையுணர்வு, உண்மை, தன் எதிர்ப்புத் திறனில் நம்பிக்கை, உம்மிடம் மூத்தவர் என்ற மதிப்பு இவைகளை எல்லாம் கருதியே தர்மபுத்திரர் கஷ்டங்கள் பலவற்றையும் பொறுத்துக் கொள்கிறார்.

**दुर्योधने सौबले च कर्णे दु:शासने तथा ।**
**एतेष्वैश्वर्यमाधाय कथं त्वं भूतिमिच्छसि ॥**
**து3ர்யோத4னே ஸௌளப3லே ச கர்ணே து3:ஶாஸனே ததா2 |**
**ஏதேஷ்வைஶ்வர்யமாதா4ய கத2ம்’ த்வம்’ பூ4திமிச்ச2ஸி ||**

துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாசனன் இவர்களிடம் நாடாளும் பொறுப்பை ஒப்படைத்தபின் நலத்தை எப்படி எதிர்பார்க்கிறீர்.

**एकस्मात् वृक्षात् यज्ञपात्राणि राजन् स्रुक् च द्रोणी पेढनी पीडनी च् ।**
**एतस्माद्राजन् ब्रुवतो मे निबोध एकस्माद्वै जायतेऽसच्च सच्च ॥**
**ஏகஸ்மாத் வ்ரு’க்ஷாத் யஜ்ஞபாத்ராணி ராஜன் ஸ்னுக் ச த்3ரோணீ பேட4னீ பீட3னீ ச் |**
**ஏதஸ்மாத்3ராஜன் ப்3ருவதோ மே நிபோ3த4 ஏகஸ்மாத்3வை ஜாயதே(அ)ஸச்ச ஸச்ச ||**

ஒரே மரத்திலிருந்து வேள்விக்கான பாத்திரங்களும் ஹோமக் கரண்டியும் உருவாகும். அதிலிருந்தே நீர்த் தொட்டியும் உரலும் உலக்கையும் கூட உருவாகும். ஒன்றிலிருந்தே கெட்டதும் நல்லதும் தோன்றலாம்.

**आत्मज्ञानं समारंभ: तितिक्षा धर्मनित्यता ।**
**यमर्थात् नापकर्षन्ति स वै पण्डित: उच्यते ॥**
**क्रोधो हर्षश्च दर्पश्च ह्री: स्तंभो मान्यमानिता ।**
**यमर्थात् नापकर्षन्ति स वै पण्डित उच्यते ॥**
**ஆத்மஜ்ஞானம்’ ஸமாரம்ப4: திதிக்ஷா த4ர்மநித்யதா |**
**யமர்தா2த் நாபகர்ஷந்தி ஸ வை பண்டி3த: உச்யதே ||**
**க்ரோதோ4 ஹர்ஷஶ்ச த3ர்பஶ்ச ஹ்னீ: ஸ்தம்போ4 மான்யமானிதா |**
**யமர்தா2த் நாபகர்ஷந்தி ஸ வை பண்டி3த உச்யதே ||**

சுய அறிவு, தகுதிக் கேற்ற முயற்சி, பொறுமை, நேர்மையில் உறுதி, கோபம், மகிழ்ச்சி, செருக்கு, தவறான செயலில் நாணம், திமிர், மதிக்கத்தக்கவர்களை மதிப்பது இவை எவனைத் தனது இலக்கிலிருந்து நழுவாமலிருக்கச் செய்கின்றனவோ அவனே பண்டிதன்- அறிவாளி.

(தொடரும்…)



## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

### ஆசார்யர் என்பவர் யார் ?

அப்போது, இந்த குரு சிஷ்ய பரம்பரை சிருஷ்டியாதியிலேயிருந்து வந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். குரு இல்லாமல் நாம் நம்முடைய வாழ்க்கையை நடத்தவே முடியாது. ஆகையால் குரு-சிஷ்ய சம்பிரதாயம் மூலமாக சாஸ்திரத்தின் தத்துவத்தைத் தெரிந்து கொண்டவன்தான் திரும்ப குரு ஆக முடியும். அது மட்டுமல்ல, சாஸ்திரத்தில் சொன்ன ரீதியிலே ஆசரணம் செய்யக்கூடியவனாயும் ஆகியிருக்க வேண்டும். நாம் புத்தகம் படித்தோம், நன்றாக பாடம் சொல்லுவோம், ஆனால், நடைமுறையில் அவற்றை ஒழுகுவது கிடையாது. என்றால் நாம் எப்படி அவனை குரு என்று சொல்ல முடியும் ? முதலில்



( ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ மஹா ஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்)

நாம் சரியாக, சாஸ்த்ரோக்த ரீதியிலே, ஆசாரத்திலே இருக்க வேண்டும். நாம் இன்னொருவனுக்கு இந்த மாதிரி நடக்க வேண்டும் என்று சொல்ல வேண்டி இருந்தால், முதலில் அந்த மாதிரி நடக்கக்கூடிய யோக்கியதாம்சம் நமக்கு இருக்க வேண்டும். "நீங்கள் தினமும் ஸ்நானம் பண்ணாமல் இருக்கின்றீர்களே" என்று யாரையாவது பார்த்து சொல்ல வேண்டும் என்றால் முதலில் நாம் ஸ்நானம் பண்ண வேண்டும். நாம் ஒரு நாள் கூட காலை வேளையிலே ஸ்நானம் பண்ணுவது கிடையாது. ஆனால், இன்னொருவரிடம், "ஏன் இப்படி ஸ்நானம் பண்ணாமல் ஸந்தியாவந்தனம் செய்கிறாய் ?" என்று எப்படி கேட்க முடியும் ? முதலில் தான் ஸதாசாரத்திலே இருந்துகொண்டு, அப்புறம் இன்னொருவனுக்கு தர்மத்தை உபதேசம் பண்ண வேண்டியது. குருவினுடைய கடமை, பிரதியொருவரும் குரு சம்பிரதாய பூர்வமாக சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாஸ்திரோக்த ரீதியிலே ஆசரணம் செய்ய வேண்டும். இன்னொருத்தருக்கு தர்மத்தை உபதேசம் செய்ய வேண்டும். இந்த யோக்யதைகள் இருக்கிறவன் தான் ஆசார்யன் என்ற சப்தத்திற்கு தகுந்தவனாக இருக்க முடியும். அது இல்லாவிட்டால், அவனை சும்மா ஆசார்யன், ஆசார்யன் என்று சொன்னால், அதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். ஆகையால். குரு என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்ற கேள்வியை கேட்டுக் கொண்டோம். அதிகததத்த்துவ: (குரு சம்பிரதாய



பூர்வகமாக சாஸ்திரத்தைத் தெரிந்து கொண்டவரும்) சிஷ்ய ஹிதாய ச (தம்முடைய சிஷ்யனுடைய நன்மையை என்றைக்கும் சிந்திக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்). “என் சிஷ்யன் சௌக்கியமாக இருக்கட்டும். என் சிஷ்யனுக்கு சரியாக ஞானம் வரட்டும். என் சிஷ்யனுக்கு சந்தேகங்கள் நிவாரணம் ஆகட்டும்.” என்று என்றைக்கும் யோசிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். அவர் தான் குரு. இந்த இரண்டு யோக்கியதைகளில் எந்த ஒன்று இல்லாவிட்டாலும் அவரை குரு என்று நாம் சொல்ல முடியாது.

குரு, சம்பிரதாய மூலமாக விஷயத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆனால், சிஷ்யனைப்பற்றி சிறிதும் அனுகம்பை அவருக்கு இல்லையென்றால் அவர் எப்படி குரு ஆவார் ? சிஷ்யனைப் பற்றி நிறைய அனுகம்பை இருக்கிறது. ஆனால், சிஷ்யன் சந்தேகம் கேட்டால் சரியான பதில் சொல்ல முடியாது என்றால், அவர்தான் என்ன குரு ? குருவின் இலக்ஷணங்கள் யாவும் ஆதிசங்கர பாகவத்பாதாளிடம் ஸம்பூர்ணமாக இருந்தன. அவருக்கு இருந்த ஞானத்தைப் பற்றிச் சொல்லக்கூடிய உரிமையும் தகுதியும் யாருக்குமே கிடையாது. அவருடைய கிரந்தங்களைப் பார்த்தால் அவர் எப்பேற்பட்ட ஞான சமுத்திரம் என்பதை ஓரளவிற்காவது தெரிந்து கொள்ளமுடியும். அப்பேற்பட்ட மஹான் பாகவத்பாத சங்கரர் ! அவருக்கு இருந்த காருண்யம் பற்றி யாருமே சொல்ல முடியாது. கேவலம் 32 வருட ஆயுளுக்குள் பாரதம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து, நாஸ்திக வாதங்களைக் கண்டித்து நீக்கி, ஆஸ்திக வாதங்களை ஜனங்களுக்கு உபதேசித்து, இத்தனை கிரந்தங்களை எழுதி, இந்தனை பண்டிதர்களை ஜெயித்து, சிஷ்யர்களை ஸங்க்ரஹித்து , சதுராம்னாய மடங்களை ஸ்தாபித்து, காஷ்மீரத்தில் ஸர்வக்ஞ பீடத்தையும் அலங்கரிக்க வேண்டுமானால் அவருடைய மஹிமை எப்பேற்பட்டதாக இருக்க வேண்டும்! இத்தனையும் கேவலம் சிஷ்யர்களின் ஹிதத்திற்காகவே அவர் செய்த காரியம். இல்லாவிட்டால், அவருக்கு என்ன வேண்டியிருந்தது ? பாஷ்யங்கள் எழுதினால் என்ன, எழுதாவிட்டால் என்ன ? பீடஸ்தாபனம் செய்தால் என்ன, செய்யாவிட்டால் தான் என்ன ? காஷ்மீரத்திற்குப் போய் ஸர்வக்ஞ பீடத்தை அனுஷ்டித்தால் என்ன, அனுஷ்டிக்கவில்லை என்றால்தான் என்ன ? ஆனால், இவ்வளவும் சிஷ்ய ஹிதத்திற்காகவே செய்யப்பட்டன. அன்று அவர் எந்த பாஷ்ய கிரந்தங்களை எழுதவில்லையென்று சொன்னால், இன்றைய தினம் நமக்கு வேதாந்தம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியுமா? அவருடைய பாஷ்யத்தைப் பற்றி சங்கரதிக் விஜயத்திலே வித்யாரண்யர் வர்ணிக்கிறார். அன்றிருந்த வித்வான்கள் செய்த தபஸின் பலனே இந்த பாஷ்யங்கள்.

வித்வான்கள் எல்லாம், “யார் யாரோ எப்படியெல்லாமோ சித்தாந்தம் செய்து கொண்டு இருக்கிறார்களே! இந்த பிரஸ்தானத்ரயத்திற்கு சரியான பாஷ்யம் பண்ணக்கூடிய மஹாத்மா எப்போது வரப் போகிறார் ? எப்போது இந்த பிரஸ்தானத்ரயத்திற்கு சரியான பாஷ்யத்தை பார்க்கக்கூடிய பாக்கியம் நமக்கு உண்டாகும்?” என்று தவித்துக்கொண்டிருந்த காலத்திலே அவர்களுடைய தபஸின் பலனாக இந்த பாஷ்யங்கள் உதயம் ஆகிவிட்டன.
(தொடரும்….)



## புருஷ ஸூக்தம்

**(ரிக்வேதம், 10.8.90)**

**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**

14. மனதிலிருந்து சந்திரன் தோன்றினான். கண்ணிலிருந்து சூரியன் தோன்றினான். முகத்திலிருந்து இந்திரனும் அக்கினியும் தோன்றினர். பிராணனிலிருந்து வாயு உண்டாயிற்று.

15. தொப்புளிலிருந்து வானவெளி தோன்றிற்று. தலையிலிருந்து சொர்க்கம் தோன்றியது. பாதங்களிலிருந்து பூமியும் காதிலிருந்து திசைகளும் தோன்றின. அவ்வாறே எல்லா உலகங்களும் உருவாக்கப்பட்டன.

16. எல்லா உருவங்களையும் தோற்றுவித்து, பெயர்களையும் அமைத்து, எந்த இறைவன் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ, மகிமை பொருந்தியவரும் சூரியனைப்போல் ஒளிர்பவரும் இருளுக்கு அப்பாற்பட்டவருமான அந்த இறைவனை நான் அறிவேன்.

17. எந்த இறைவனை பிரம்மா ஆதியில் பரமாத்மா என்று கண்டு கூறினாரோ, இந்திரன் நான்கு திசைகளிலும் எங்கும் நன்றாகக் கண்டானோ அவரை இவ்வாறு அறிபவன் இங்கேயே அதாவது இந்தப் பிறவியிலேயே முக்தனாக ஆகிறான். மோட்ஷத்திற்கு வேறு வழி இல்லை.

18. தேவர்கள் இந்த மாபெரும் பிரபஞ்ச வேள்வியைச் செய்ததால் மேலான உலகை அடைந்தார்கள். இந்த வேள்வியைச் செய்பவர்களும் அந்த உலகை அடைவார்கள். இந்த வேள்வியைச் செய்வது முதன்மையான தர்மம் என்றும், இதைச் செய்பவர்கள் மகான்கள் என்று சிறப்பித்துப் பேசப்படுவதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

இதுவரை கண்ட 18 மந்திரங்களுடன் புருஷ ஸூக்தம் நிறைவடைகிறது. ஆனால் தென்னாட்டில் பொதுவாக புருஷ ஸூக்தத்தை உத்தர நாராயணம், நாராயண ஸூக்தம், விஷ்ணு ஸூக்தத்தின் முதல் மந்திரம் இவற்றுடன் சேர்த்தே பாராயணம் செய்கிறார்கள். எனவே அவை முழுவதையும் பார்ப்போம் .

19. தண்ணீரிலிருந்தும் சாரமான அம்சத்திலிருந்தும் பிரபஞ்சம் உண்டாயிற்று. பிரபஞ்சத்தை உருவாக்கிய இறைவனிடமிருந்து சிறந்தவரான பிரம்மா தோன்றினார். இறைவன் அந்த பிரம்மாவின் உருவை உருவாக்கி அதில் வியாபித்திருக்கிறார். பிரம்மாவின் இந்தப் பிரபஞ்ச வடிவம் படைப்பின் தொடக்கத்தில் உண்டாயிற்று.


(தொடரும்...)



## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### முன்னுரை



முதலில் ஆசார்யாளின் ஆளுமையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி அதன் பின் இந்நூலில் இதை எப்படி விவரிக்கப் போகிறோம் என்பதைக் கூறுவோம். ஆசார்யாளின் சிஷ்யரான ஜகத்குரு ஸ்ரீமத் பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் , ஆசார்யாளின் பெருமையைப் போற்றும் அஷ்டோத்தர சத நாமாவளி ஒன்றை எழுதியிருப்பது பலரும் அறிந்திருக்கலாம். "अतिमानुषचारित्र:" என்று குறிப்பிடுகிறார்: ஆசார்யாளின் சரித்திரம் மனிதர்களுக்கு அப்பாற்பட்டது என்று இதற்குப் பொருள். ஒவ்வொரு முறையும் ஆசார்யாளின் சரித்திரத்தைப் படிக்கும் பொது இக்கூற்று எவ்வளவு உண்மை என்று உணர்கிறோம். பொதுவாக உலகில் ஒருவர் ஓரிரண்டு விஷயங்களில் மட்டுமே வல்லவராக இருப்பார். ஆனால் ஆசார்யாளே எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் வல்லவராகவும், அத்துறையில் ஈடுபடும் மற்றவருக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். பதினான்கு வயது நிரம்பும் முன்னரே துறவறம் பூண்டார். பதினெட்டு வயதில் ஜீவன்முக்தராகிப் பிறவிப் பயனைத் துய்த்தார். இதைத் தவிர பல்வேறு சாஸ்திரங்களில் புலமை, எண்ணற்ற சிஷ்யர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்றவாறு உபதேசித்தல், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு பீடத்தின் தலைமை, என்றவாறு அவருடைய ஆளுமை பன்முகத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இந்த காரணத்தினால் தான் மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தாம் புனைந்த நாமாவளியில் ஆசார்யாள் "पारावारातिगम्भीर:" - கடலைப் போல் மிக ஆழமானவர் என்று குறிப்பிடுகிறார்.

ஆசார்யாளின் ஆளுமையில் உள்ள பன்முகத்தன்மையினால் பல்வேறு மக்கள் ஆசார்யாளைப் பல்வேறு விதமாகக் காண்கின்றனர் என்று கூறினோம். அதைச் சற்று விரிவாகப் பார்ப்போம். முதலில், இந்நூலில் விரவி வரும் "ஆசார்யாள் " என்ற சொல்லையே எடுத்துக் கொள்வோம். இச்சொல்லிற்கு விசேஷமான பொருள் உண்டு. இச்சொல்லின் வேர்ச்சொல் சம்ஸ்க்ருத மொழியில் "चर" என்பது. இதன் பொருள் "நடத்தல்" என்பதாகும். ஆசாரம், ஆசார்யர், ஆசரணம் என்கிற சொற்கள் இச்சொல்லிலிருந்தே பிறக்கின்றன. "ஆசாரம்" என்றால் "நன்னடத்தை". ஒருவரது நடத்தை நல்லதா என்பதைத் தீர்மானிப்பது சாஸ்திரமே. அதன்படி, ஆசார்யர் என்பவர் சாஸ்திரம் நன்னடத்தையாக எதைக் கூறுகிறது என்பதை அறிந்து



மற்றவரையும் அவ்வழியில் நடத்துபவர். அதை விட முக்கியமாகத் தாமும் அதை நடைமுறையில் வாழ்ந்து காட்டுபவர். "ஊருக்கு உபதேசம்" என்று வழக்கில் உள்ளபடி ஊருக்கெல்லாம் உபதேசம் செய்து அதைத் தாம் கடைபிடிக்காதிருப்பவர் ஆசார்யர் என்று அழைக்கத் தகுதியற்றவர். எனவே தான் "ஆசார்யர்" என்ற சொல்லிற்குப் பொருளாக:

"आचिनोति हि शास्त्रार्थमाचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मादाचार्यः स निगद्यते ॥"
"ஆசினோதி ஹி ஶாஸ்த்ரார்த$^2$மாசாரே ஸ்தா$^2$பயத்யபி |
ஸ்வயமாசரதே யஸ்மாதா$^3$சார்ய: ஸ நிக$^3$த்$^3$யதே ||"

என்று வாயு புராணம் கூறுகிறது. (எவர் சாஸ்திரத்தின் உட்பொருளை அறிந்து, தாம் அதை செயல்படுத்திப் பிறரையும் அதில் நிலைநிறுத்துகிறாரோ அவரே "ஆசார்யர்" என்று அறியப்படுகிறார்.)

இனி, ஆசார்யாளின் வரலாற்றை மனதில் வைத்துக் கொண்டு இந்த சுலோகத்தைப் பார்த்தோமானால் முதலில் (சுலோகத்தில் உள்ள) "சாஸ்திரம்" என்ற சொல்லிற்கு முக்கியமாக "வேதாந்த சாஸ்திரம்" என்ற பொருள் சொல்லலாம். அவ்வாறு எடுத்துக் கொண்டால் "ஆசார்யர்" என்ற சொல்லிற்கு மேலே கண்ட சுலோகத்தின் அடிப்படையில், "எவர் வேதாந்த சாஸ்திரத்தின் தாத்பர்யத்தை அதாவது, பரம்பொருளை அறிந்து அதில் தாம் நிலைபெற்று, மற்றவரையும் நிலைபெறச் செய்கிறாரோ, அவரே ஆசார்யர் என்று அறியப்படுகிறார்." என்று பொருள் கொள்வோம். இங்கே ஒரு விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். மற்ற சாஸ்திரங்களிற்கும் வேதாந்த சாஸ்திரத்திற்கும் சில முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக, வேதாந்த சாஸ்திரத்தைக் கற்பதற்கு அந்த சாஸ்திரம் சில தகுதிகளைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், மற்ற சாஸ்திரங்களைப் போல் அல்லாமல், இத்தகுதிகள் பயில்பவரின் மனத்தூய்மை குறித்துக் கூறப்பட்டுள்ளன. இவை இருந்தால் தான் வேதாந்த தத்துவம் மனதில் ஒளிரும். எனவே வேதாந்த ஆசார்யர் என்பவரின் மனம் மிகத் தூய்மையாகவும் உள்திரும்பியதாகவும் இருத்தல் வேண்டும். அடுத்ததாகப், பரம்பொருளை அறிந்த ஒருவரால் மட்டுமே இன்னொருவரைப் பரம்பொருளில் நிலைநிறுத்த முடியும். இதை வேதமே கூறுகிறது.

न नरेणावरेण प्रोक्त एष सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः । अनन्यप्रोक्ते गतिरत्र नास्ति....
ந நரேணாவரேண ப்ரோக்த்த ஏஷ ஸுவிஜ்ஞேயோ ப$^3$ஹுதா$^4$ சிந்த்யமான: . அனன்யப்ரோக்தே க$^3$திரத்ர நாஸ்தி....
(ஆத்மாவை அறியாத இன்னொருவரால் உபதேசிக்கப்பட்டவன் எவ்வளவு தீவிரமாக விசாரம் செய்தாலும், அவன் ஆத்ம தத்துவத்தை அறிவதில்லை. ஆத்ம தத்துவத்தை அறிந்தவரால் உபதேசிக்கப்பட்டவன் மோக்ஷம் அடைகிறான்.) சுருக்கமாகச் சொன்னால், ஆசார்யர் என்பவர் பரம்பொருளை உணர்ந்த ஞானியாக இருக்க வேண்டும்.

(தொடரும் …) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை



*Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.*

- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

அப்படிக்கன்னியில் நம் குழந்தையே வந்து "அப்பா , நான் தான் எடுத்து சாப்பிட்டேன்" என்று சொன்னால் அந்தக் கோபம் வருகிறதில்லை. "சரி போ, நீ தானே சாப்பிட்டாய்" என்று ஸமாதானம் செய்து கொள்ள முடிகிறது. வேற்று மனுஷியர் சாப்பிட்டாலும், நம் குழந்தை சாப்பிட்டாலும், நமக்கு இல்லையென்று போய்விட்ட அம்சம் பொதுவாக அப்படியே இருக்கிறது. ஆனாலும், மனஸுக்கு ஸமாதானமாகாத நிலை, ஸமாதானமாகும் நிலை என்ற வித்யாசமிருக்கிறது. இதற்குக் காரணம் அந்த மனுஷியர் வேறு, குழந்தை நம்மைச் சேர்ந்தது என்ற எண்ணம்தான். அந்த மனுஷியரிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் இருந்துவிட்டால் கோபம் வராது.

அந்தக் கோபம் வருவதிலும் தாரதம்யமுண்டு. எடுத்துச் சாப்பிட்டது இவனுடைய மனைவியாயிருந்தால் கோபம் கொஞ்சமாக வரும். எடுத்துச் சாப்பிட்டது வேறு பந்துக்களாயிருந்தால் கோபம் ஜாஸ்தியாக வரும். எடுத்துச் சாப்பிட்டது வீட்டு பரிசாரகனாயிருந்தால் இன்னும் அதிகக் கோபம் வரும். எடுத்துச் சாப்பிட்டது வண்டிக்காரனாயிருந்தால் இன்னும் அதிகக் கோபம் வரும். வீட்டுக்கு வந்த பிச்சைக்காரன் எடுத்துச் சாப்பிட்டிருந்தால் மிகவும் கோபம் ஏற்படும். அதாவது, எடுத்துச் சாப்பிட்டது இவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு நெருங்கின ஸம்பந்தம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு கோபம் குறைந்து மனது ஸமாதானமடையும். அந்தக் குழந்தை தன்னைச் சேர்ந்தது என்கிற எண்ணமிருக்கையிலேயே மனஸ் ஸமாதானம் அடைகிறபோது,"தன்னைச் சேர்ந்தது" என்று மாத்திரம் எண்ணாமல் "தானேதான்" என்ற எண்ணம் ஏற்பட்டுவிடுமானால், மனதிற்கு எவ்வித கலக்கமும் ஏற்படாதென்பதில் ஸந்தேஹப்படுவதற்கு இடமேயில்லை. அதனால்தான், பெரியோர்கள் "தன்னைப்போல் அதாவது தனக்கு சமானமாக எல்லோரையும் எண்ணு" என்று சொல்கிறார்கள். அதற்கும் மேல்படியாக வேதம் "எல்லோரையும் தன்னைப்போல் பாவித்தால் போதாது, தானாகவே எண்ணு" என்று சொல்கிறது. ஸகல பிராணி வர்க்கங்களும் ஒரே ஆத்ம தத்வமென்று போதிக்கிறது. அவ்வித உத்தமமான பாவனை வருவது ஸுலபமல்ல. ஆகையால் சாதாரணமாக தன்னைப்போல் மற்றவர்களைப் பாவிக்கிறதென்றபடியில்தான் இருக்க முடியும்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# श्री पार्वतीश्रीकण्ठस्तुतिः
# (श्रीगरपुरप्रवेशकाले)

### ஶ்ரீ பார்வதீ ஶ்ரீகண்ட²ஸ்துதி:
### (ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

आसन्बहवो वस्रा मातस्त्वच्चरणदर्शनं हित्वा ।
पार्वति कृतार्थतां खलु गमितस्त्वत्पाददर्शनादद्य ॥1॥
ஆஸன்ப³ஹவோ வஸ்ரா மாதஸ்த்வச்சரணத³ர்ஶனம்' ஹித்வா |
பார்வதி க்ரு'தார்த²தாம்' க²லு க³மிதஸ்த்வத்பாத³த³ர்ஶநாத³த்³ய ||1||

தாயே! பார்வதி! உன் சரண தரிசனமின்றிப் பல நாட்களாயின. இன்று உன் சரண தரிசனத்தால் தனியனானேன்.



सच्चित्सुखस्वरूपं ब्रह्मैतत्पश्यतेन्दुशीर्षाख्यम् ।
इति वदति शैलतनया साक्षान्नूनं प्रसारिताङ्गुल्या ॥2॥
ஸச்சித்ஸுக²ஸ்வரூபம்'
ப்³ரஹ்மைதத்பஶ்யதேந்து³ஶீர்ஷாக்²யம் |
இதி வத³தி ஶைலதனயா ஸாக்ஷான்னூனம்'
ப்ரஸாரிதாங்கு³ல்யா ||2||

மலைமகள் தன் விரலால் சுட்டிக்காட்டி இந்த ஸத்-சித்-ஆனந்த வடிவான சந்திர சேகரப் பெருமானாகிய பிரம்மத்தைக் காண்பீர் எனச் சொல்கிறாள்.

भक्तानां पापवृक्षौघच्छेदनायेन्दुशेखर ।
बिभर्षि पट्टसं रत्नत्सरुं किं लोकशङ्कर ॥3॥
ப⁴க்தானாம்' பாபவ்ரு'க்ஷௌக⁴ச்சே²த³னாயேந்து³ஶேக²ர
|
பி³ப⁴ர்ஷி பட்டஸம்' ரத்னத்ஸரும்' கிம்' லோகஶங்கர ||3||

உலகிற்கு மங்களம் விளைவிப்பவரே! பிறை சூடியே! பக்தர்களின் பாபமாகிய மரவரிசையை வெட்டிச் சாய்க்க, ரத்னத்தாலான கைப்பிடி கொண்ட பட்டாக்கத்தியைத் தாங்கியுள்ளீரோ ?

स्पृष्टस्य चैकेन पदासुरस्य महत्पदं महत्पदं मुक्तिरभूत्किलास्य ।
स्पर्शेऽन्यपादस्य फलं हि दातुं नास्तीत्यतो व्योम्नि दधासि चान्यम् ॥4॥
ஸ்ப்ரு'ஷ்டஸ்ய சைகேன பதா³ஸுரஸ்ய மஹத்பத³ம்' மஹத்பத³ம்' முக்திரபூ⁴த்கிலாஸ்ய |
ஸ்பர்ஶே(அ)ன்யபாத³ஸ்ய ப²லம்' ஹி தா³தும்' நாஸ்தீத்யதோ வ்யோம்னி த³தா⁴ஸி சான்யம்
||4||

ஒரு கால் அஸுரன் மீதுபட்டதும் அவனுக்கு முக்தி கிட்டியது. மற்றோரு சரணத்தின் ஸ்பர்சத்திற்கு அளிக்கத்தக்க பலனேதுமில்லை என வானில் காலைத் தூக்கினீரோ ?



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்


## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் 1

**(கலியுகத்தில் மக்களின் தாழ்நிலை; இராமாயண பாராயணத்தால் ஏற்படும் பலன்கள் மற்றும் இராமாயணம் கேட்பதற்கு உகந்த காலம்)**

அந்தணோத்தமர்களே ! கார்த்திகை, மாசி, சித்திரை மாத சுக்லபட்சத்தில் (பிரதமை முதல்) ஒன்பது நாட்களுக்கு அமுதக் கதையாகிய இராமாயணத்தைக் கேட்க வேண்டும். இவ்வாறாக, சமஸ்த



மங்களங்களையும் கொடுக்கவல்ல ஸ்ரீயே ராமப்பிரபுவின் வரலாற்றைச் செவிமடுப்பவன் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் தான் விரும்பிய உயர் நோக்கங்களையெல்லாம் அடைகிறான்.

இந்த முறைப்படி இராமாயணத்தைக் கேட்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கியவனாக, தனக்கு முந்தைய இருபத்தொரு தலைமுறையினருடன் இராமலோகத்தை அடைகிறான் ; அங்கே சோகம் என்ற பேச்சே இல்லை. சித்திரை, மாசி, கார்த்திகை மாத சுக்லபட்சத்தில், ஒன்பது நாட்கள் பாராயணம் செய்வதுடன். மிகவும் ஆர்வத்துடன் கதையை கேட்கவும் வேண்டும். இராமாயணம், உலகில் முதன்முதலாக இயற்றப்பட்ட காவியம். தேவலோகத்தையும், முக்தியையும் அளிக்கக் கூடியது.ஆகவே, எல்லா வகையான அரச்செயல்களும் நசிந்து போய்விடும் பயங்கரமான கலியுகத்தில் இராமாயண கதை என்னும் அமுதம், ஒன்பது நாட்கள் என்ற முறைப்படி நம் செவிகளால் பருகப்பட வேண்டும்.

வேதியர்களே ! பயங்கரமான கலியுகத்தில் , ஸ்ரீராமனின் திருப்பெயரையே அண்டியிருப்பவர்கள் எவர்களோ, அவர்களை கலிபுருஷன் அண்டுவதில்லை . அவர்கள் கலியின் கொடுமைகளை அனுபவிப்பதில்லை. எந்த வீட்டில் நாள்தோறும் இராமாயணச் சொற்பொழிவு நடைபெறுகிறதோ, அந்த வீடு புண்ணிய க்ஷேத்திரமாகிவிடுகிறது. அவ்விடம் சென்றதும் துஷ்டர்களுடைய பாவங்கள் நசித்துப் போகின்றன.

தவச்செல்வர்களே! இராமாயணக் கதையை பக்தி-சிரத்தையுடன் கேட்காதவரையில், ஒரு மனிதனுடைய சரீரத்தில் பாவங்கள் குடிகொண்டிருக்கின்றன. பாவங்களின் பயனான நோய்கள், இராமாயணக் கதையைக் கேட்பதால் நீங்கிவிடுகின்றன. இராமாயணத்தைக் கேட்பது (பாராயணம் செய்வது) என்பது, உலகில் எளிதாக அடையக்கூடிய, பேறு



அல்ல. கோடிக்கணக்கான பிறவிகளில் செய்து, சேர்த்து வைக்கப்பட்டுள்ள மகத்தான புண்ணியத்தின் விளைவாகவே கிடைக்கக் கூடியது.

வைதிகோத்தமர்களே ! கார்த்திகை, மாசி, சித்திரை மாத சுக்லபட்சத்தில், இராமாயணத்தைக் கேட்டமாத்திரத்திலேயே, அரக்க இயல்பை அடைந்துவிட்டிருந்த ஸௌதாஸன் என்பவன் அந்தச் சாபத்திலிருந்து விடுபட்டான். கௌதம மாமுனிவரின் சாபத்தினால் அரக்க உருவத்தைப் பெற்றுவிட்ட ஸௌதாஸன் இராமாயணத்தைக் கேட்ட மகிமையால் விடுதலை அடைந்து, மீண்டும் பழைய வடிவத்தைப் பெற்றான். ஸ்ரீ ராமசந்திரனிடம் பக்திபூண்டு, இராம பக்தியில் திளைப்பவன் இந்தக் கதையைக் கேட்பானேயாகில், மஹாபாவங்களிலிருந்தும் பலவகையான பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

**ஸ்ரீ ஸ்கந்தபுராணம், இராமாயண மஹாத்ம்யம் என்ற பகுதியில்**
**முதலாவது அத்தியாயம் முற்றிற்று**

## அத்தியாயம் 2

### நாரத - ஸனத்குமாரர் உரையாடல்; சோமதத்தன் சாபம் நீங்குதல்.

**முனிவர்கள் கேட்கிறார்கள்** - மாமுனிவரே ! தேவரிஷியான நாரதர், அறம் நிறைந்த நூலாகிய, இராமசரிதையைக் கூறும் இராமாயணத்தை ஸநத்குமாரருக்கு எவ்வாறு கூறினார்? அவர்கள் இருவரும் எங்கே சந்தித்துக் கொண்டார்கள் ? பண்பாளரே ! பிரும்மவாதினிகளான பரப்பிரும்மத்தை முற்றிலுமாக அறிந்த அவர்கள், எந்தப் புண்ணியத்தலத்தில் சந்தித்துக் கொண்டார்கள் ? இவருக்கு (ஸநத்குமாரருக்கு) நாரதர் கூறியவற்றை தாங்கள் எங்களுக்குக் கூறியருள வேண்டும்.

**ஸூதர் கூறுகிறார்**: மகாத்மாக்களே! சனகர் முதலியவர்கள், பிரும்மாவின் மானஸபுத்திரர்களாக கருதப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் அஹங்கார - மமகாரம் இல்லாத நைஷ்டிக பிரம்மசாரிகள். அவர்களுடைய பெயர்களைச் சொல்கிறேன். கேளுங்கள்- ஸனகர், ஸனந்தனர், ஸனத்குமாரர், ஸநாதனர். அவர்கள் நால்வரும் திருமாலடியார்கள்; மஹாத்மாக்கள்; பரப்பிரும்மத் தியானத்திலேயே ஆழ்ந்திருப்பவர்கள்; ஆயிரம் சூரியனுக்கு நிகரான ஒளிபடைத்தவர்கள்; சத்தியமே பேசுபவர்கள். முக்தியில் இச்சை கொண்டவர்கள். ஒருநாள், பிரும்மாவின் புத்திரர்களும் மஹாதேஜஸ்விகளுமான ஸனகர் முதலியோர், பிரும்மாவின் சபா மண்டபத்தைப் பார்ப்பதற்காக மேருமலைச் சிகரத்தைச் சென்றடைந்தார்கள். எல்லோராலும் போற்றப்படும் ஆன்மிக ஆற்றலையுடைய அவர்கள், மஹாவிஷ்ணுவின் திருவடிகளிலிருந்து தோன்றியதும், மிகவும் புனிதமானதும், சீதா என்ற பெயரால் அழைக்கப்படுவதுமான கங்கா நதியைக் கண்டு, அதில் நீராட விரும்பினார்கள். (தொடரும் .....)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்